# மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையம்
# Mount Druitt Tamil Study Centre

Mobile: 0413 229 638 | Email :mtdruitttsc@gmail.com | Web : www.mtsc.org.au





## ஆண்டு 4

பேச்சுப் போட்டி குறிப்பின் ஒலி வடிவத்திற்கு இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :

(குறிப்பு : இது ஒரு வழிகாட்டல் மட்டுமே. மாணவர்கள் தங்களது சொந்த வசன நடையில் இதனை பயின்று மேடையில் பேசுவதற்கு பெற்றோர்கள் ஊக்கப்படுத்தவும்)

அனைவருக்கும் அன்பான வணக்கம் .......

# மகாகவி
# சுப்ரமணிய பாரதியார்

**ஓடி விளையாடு பாப்பா – நீ**
**ஓய்ந்திருக்கலாகாது பாப்பா!**
போன்ற பாப்பா பாடல்கள் மூலம் சிறுவர்களின் மனதில் இடம் பிடித்தவர் தான் பாரதியார்.

இந்தியாவின் எட்டையபுரத்தில் சின்னசாமி ஐயருக்கும் இலக்குமி அம்மாளுக்கும் மகனாக ஆயிரத்து எண்ணூற்றி எண்பத்தி இரண்டாம் (1882) ஆண்டு மார்கழியில் அவதரித்தார்.

**“நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையுடன் யார்க்கும் அஞ்சாதபடி”** பெண்களை வாழத்தூண்டினார்.

**“அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே”** என துணிவுடன் வாழ வழிகாட்டினார்.

இந்தியாவின் சுதந்திரத்திற்காகவும் பெண்களின் உரிமைகளுக்காகவும் போராடினார். பாரதி ஒரு கவிஞர், எழுத்தாளர், இதழாசிரியர், விடுதலைப் போராட்டவீரர் எனப் பன்முகம் கொண்டவர். அவர் தனது முப்பத்தொன்பதாவது(39) வயதில் இறைபதம் அடைந்தார்.

**“வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி**
**வாழிய வாழியவே!”** என்ற பாரதியாரின் தமிழ்மொழி
வாழ்த்துடன் விடைபெறுகிறேன்.

நன்றி .
வணக்கம்.




**ஆக்கம்:**
திருமதி. விஜயசுதா குகனேஸ்வரன்
திருமதி. ஜனனி டோவிட் மதன்ராஜ்
செல்வி. காருண்யா சுதாகரன் (ஆசிரிய உதவியாளர்)


**பேச்சுப் போட்டி எதிர்வரும் 31.05.2025 அன்று மாலை 1 மணி முதல் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.**